28.ஏப்ரல், 2022 பக்கங்கள்- 01

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182

தினப்புயல்
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்

புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-02 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 49

# 1000 தொழிற்சங்கங்களின் ஆதரவுடன் பாரிய அடையாள வேலை நிறுத்த போராட்டம்

அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள் இன்று (28) பாரிய அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளனர். கல்வி, போக்குவரத்து, தோட்டம், துறைமுகம், மின்சாரம், தபால், சமுர்த்தி, வங்கி, அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் என அனைத்து தரப்பு மக்களும் இந்த வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்களின் ஆதரவுடன் தொழிற்சங்கப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள தொழிற்சங்கங்கள் நண்பகல் 12.00 மணிக்கு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக பாரிய எதிர்ப்பு பேரணியை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தற்போதைய அரசாங்கம் ஏழு நாட்களுக்குள் பதவி விலகாவிட்டால் எதிர்காலத்தில் தொடர்ச்சியான தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையத்தின் இணை அழைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார். சுமார் 50 சதவீத வைத்தியசாலை ஊழியர்களும் இந்த வேலைநிறுத்தத்திற்கு ஆதரவளிக்கின்றதாக தெரிவிக்கப்படுகின்றது. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கமும் வேலை நிறுத்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளது.



## கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு சபாநாயகர் அழைப்பு

பாராளுமன்ற குழுவின் விசேட கூட்டம் இன்று (28) நடைபெறவுள்ளது. சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் இந்தக் கூட்டத்தை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அரசியலமைப்பின் 21வது திருத்தம் தொடர்பான முன்மொழிவுகள் குறித்து கலந்துரையாடுவதே இந்த கலந்துரையாடலின் பிரதான நோக்கமாகும். மேலும், அடுத்த வார பாராளுமன்ற நடவடிக்கைகள் குறித்து இன்றைய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

## மூன்றாவது நாளாக தொடரும் ஐக்கிய மக்கள் சக்தியின் பேரணி

எரிபொருள் விலையேற்றம், மின்வெட்டு, வாழ்க்கைச் செலவு உள்ளிட்ட அரசாங்கத்தின் அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிராக கண்டியில் ஒன்றிணைந்த ஐக்கிய மக்கள் சக்தியினால் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்புப் பேரணி இன்று மூன்றாவது நாளாக தொடர்கின்றது. இரண்டாவது நாளான நேற்று (27) மாவனெல்லை பிரதான பஸ் தரிப்பிடத்திலிருந்து ஆரம்பமான ஆர்ப்பாட்ட பேரணி கலிகமுவவில் நிறைவடைந்தது. அதன்படி இன்று கலிகமுவ நகரிலிருந்து தனோவிட்ட வரையிலான எதிர்ப்பு பேரணி முன்னெடுக்கப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

## புகையிரத சேவைகள் பாதிப்பு

பல புகையிரத தொழிற்சங்க ஊழியர்கள் இன்றைய தினம் வேலைக்கு சமூகமளிக்காத காரணத்தினால் புகையிரத சேவைகள் தடைப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் இன்று இயக்கப்படவுள்ளன. பேருந்து உரிமையாளர்கள் விரும்பினால் மாத்திரம் சேவையில் இருந்து விலக முடியும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

## கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில்

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் பணிப்புறக்கணிப்பு போராட்டத்திற்கு ஆதரவாக கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் கட்டுநாயக்க எவெரிவத்தை சந்தியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டம் காரணமாக அப்பகுதியில் வீதிகளின் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரச மற்றும் தனியார் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்துள்ள பணிப்புறக்கணிப்பு காரணமாக நாட்டின் அனைத்து பகுதிகளிலும் அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கைக்கான உழவுவேலைகள் ஆம்பமாகியுள்ளதுடன் அதற்கான செலவுகளும் பாரியளவில் அதிகரித்துள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். - பாரூக் ஷிஹான்**

